வேலூர் மாவட்டம்

அரையாண்டு பொதுத்தேர்வு – டிசம்பர் 2025
+2 வரலாறு – விடைக்குறிப்புகள்
மொத்த மதிப்பெண் : 90

பகுதி – I சரியான விடையைத் தேர்ந்தெடு **20 × 1 = 20**

1. ஈ) W.C.பானர்ஜி
2. இ) ஜதீந்திரநாத் பானரீஷி & ஸ்ரீந்தர் குமார் கோஷ்
3. இ)முஸ்லீம் லீக்கின் தனித்தொகுதி கோரிக்கையை காங்கிரஸ் ஏற்றுக்கொண்டது
4. இ)லாலா ஹர்தயாள்
5. ஆ)கோகலே
6. அ) ஏப்ரல் 6, 1930
7. இ)ஜதீந்திர நாத் தாஸ்
8. ஈ) கூற்று சரி, காரணம் கூற்றை விளக்குகிறது
9. ஆ)லின்லித்கோ பிரபு
10. இ)ஜூன்,1948
11. அ) ஜனவரி 30, 1948
12. இ)ஆந்திரா
13. அ)1951
14. ஆ)1991
15. ஈ)செயின்ட் பீட்டர்ஸ்பர்க்
16. அ)மான்செஸ்டர்
17. அ)பாரீஸ்
18. அ)அவந்தி
19. ஆ)1928
20. அ)ஆல் பிரட் சாவே

பகுதி – II ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி **7 × 2 = 14**

21. i) அவுரி சாகுபடிக்கு பண்ணையாளர்கள் சந்தை விலையை விட குறைவாக கொடுத்தனர்.
    ii) இதனை எதிர்த்து விவசாயிகள் (1859–60) ஈடுபட்டனர்.
    iii) இக்கலகத்தின் மூலம் பண்ணையாளர்கள் வடக்கு வங்காளத்தில் இருந்து வெளியேற்றப்பட்டனர்.

22.
i) இந்து மத நம்பிக்கைகளால் முலாம் பூசப்பட்ட தேசப்பற்றை முஸ்லீம்கள் ஏற்கவில்லை.
ii) சுதேசி இயக்க தலைவர்கள் சமூகத்தின் பெரும் பகுதி மக்களை ஊடுருவத் தவறினர்.

iii) 1907 ல் ஏற்பட்ட சூரத் பிளவு தீவிர தேசியவாதத்தின் வீழ்ச்சிக்கு வழிவகுத்தது.

23.
i) முதல் உலகப் போரின் முடிவில் கலீபாவின் ஆளுமை முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.
ii) கலீபாவின் அதிகாரத்தை துண்டாடுவது இசுலாம் மீதான பெரும் தாக்குதலாக கருதப்பட்டது.
iii) எனவே ஆட்டோமான் அரசை ஆதரித்து இந்தியாவில் கிலாபத் இயக்கம் தொடங்கப்பட்டது.

24.
i) ஊருணிகள் மற்றும் கிணறுகளில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அடிப்படை உரிமைகளை மீட்டுத்தர இதனைத் தொடங்கினார்.
ii) அம்பேத்கரின் அறிவாற்றல் மற்றும் நடவடிக்கைகள் அனைவரின் கவனத்தையும் ஈர்த்தன.
iii) இந்திய தேசிய காங்கிரஸ் மற்றும் பிரிட்டிஷ் அதிகாரிகளை அவர் சாடினார்.

25.
i) அரச பிரதிநிதியின் குழுவிற்கு உறுப்பினர்களை அனுப்புவதில் காங்கிரசிற்கும் முஸ்லிம் லீக்கிற்கும் இடையே சிக்கல் எழுந்தது.
ii) முஸ்லிம் லீக் தனக்கு மட்டுமே இஸ்லாமிய பிரதிநிதிகளை நியமிக்க உரிமை உள்ளது என்று வாதிட்டனர்.
iii) காங்கிரஸ் இந்துக்களை மட்டுமே நியமிக்க முடியும் என்ற முஸ்லீம் லீக்கின் வாதத்தை காங்கிரஸ் ஏற்க மறுத்தது.

26.
i) இந்திய அரசமைப்பின் உறுப்பு 370ன் படி ஜம்மு–காஷ்மீருக்கு தனி சிறப்பு அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது.
ii) காஷ்மீர் இந்தியாவின் ஒரு பகுதியாக போது காஷ்மீர் மக்களுக்கு அளித்த உறுதிமொழியின்படி இந்த அந்தஸ்து வழங்கப்பட்டது.
iii) இதன்படி இந்திய அரசின் சட்டங்கள் காஷ்மீர் சட்டமன்றத்தின் அனுமதியின்றி அங்கு செல்லாது.
iv) தற்போது இச்சட்டப்பிரிவு நீக்கப்பட்டுள்ளது.

27. i) பிளாரன்ஸின் சக்திவாய்ந்த வர்த்தக குடும்பமாக மெடிசி குடும்பம் விளங்கியது.
ii) காசிமோ– டி–மெடிசி என்பவர் இத்தாலி முழுவதும் வங்கிக் கிளைகளை நடத்தி கொடி கட்டி பறந்தார்.

iii) மைக்கேல் ஆஞ்சிலோ, லியார்னோடோ டாவின்சி உள்ளிட்ட பல கலைஞர்களுக்கு மெடிசி குடும்பம் ஆதரவளித்தது.

28.
i) பாஸ்டன் படுகொலையை தொடர்ந்து 100 கிளர்ச்சியாளர்கள் பூர்வகுடி அமெரிக்கர்களை போல வேடம் தரித்தனர்.
ii) அவர்கள் பாஸ்டன் துறைமுகத்தில் இருந்த மூன்று கப்பல்களில் ஏறினர்.
iii) அக்கப்பல்களில் இருந்த 342 தேயிலை பெட்டிகளை கடலுக்குள் வீசி எறிந்தனர்.

---

29. i) பல்லாண்டுகால சமூக அமைப்பை எதிர்க்கும் உணர்வின் பிரதிநிதித்துவம் நிகிலிசமாகும்.
ii) நிகிலிசம் நாட்டின் அரசு, தேவாலயம், குடும்பம் போன்ற நிறுவனங்களின் அதிகாரத்தை மறுத்தது.
iii) அதன் நம்பிக்கைகள் விஞ்ஞான அடிப்படையிலான உண்மையை சுற்றியே அமைந்திருந்தன.

30.
i) பிரான்சின் வெளியுறவுத்துறை அமைச்சரான ராபர்ட் ஷீமன், பிரான்சுக்கும் ஜெர்மனிக்கும் இடையே சமரசம் ஏற்பட்டால் அது இருநாடுகளுக்கும் நன்மை என்றார்.
ii) இரு நாடுகளின் நிலக்கரி மற்றும் எஃகு ஆகியவற்றின் கூட்டு உற்பத்தியை, உயர்மட்ட ஆணையம் மூலம் நிர்வகிக்கப்பட வேண்டும் என முன்மொழிந்தார்.
iii) பொருளாதார ஒருங்கிணைப்புக்கான இத்திட்டம் இரு நாடுகளையும் தானாகவே இணைத்தது.

பகுதி – III

ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி

31.
i) கம்பெனியின் பங்குதாரர்களுக்கு லாபத்தில் வழங்கப்பட வேண்டிய பங்கு.
ii) இருப்புப் பாதை துறையில் முதலீடு செய்தவர்களுக்கு தரப்பட வேண்டிய வட்டி.
iii) ஓய்வுபெற்ற அதிகாரிகளுக்கும் தளபதிகளுக்கும் வழங்கப்பட வேண்டிய ஓய்வூதியம்.
iv) போர்களுக்காக இங்கிலாந்திடமிருந்து பெற்ற கடனுக்கு செலுத்த வேண்டிய வட்டி.

32.

i) அரவிந்த கோஷ் அவரின் சகோதரர் ஆகியோருடன் மேலும் 35 நபர்கள் கைது செய்யப்பட்டனர்.
ii) சித்தரஞ்சன்தாஸ் இவ்வழக்கில் புரட்சிகர தேசியவாதிகளுக்காக வாதாடினார்.
iii) சதியில் ஈடுபட்டதற்கான ஆதாரங்கள் இல்லாததால் அரவிந்த கோஷ் விடுவிக்கப்பட்டார்.
iv) இவ்வழக்கு புரட்சிகர தேசியவாதிகளை கதாநாயர்களாக சித்தரித்தது.

33.

i) மாகாணங்களுக்கு நிர்வாகங்களில் அதிக பங்கு வழங்கப்பட்டது.
ii) சட்டம், ஒழுங்கு, நிதி போன்ற முக்கியமான துறைகள் ஆங்கிலேயருக்கு ஒதுக்கப்பட்டன.
iii) சுகாதாரம், கல்வி போன்ற உள்ளாட்சி துறைகள் இந்திய பிரதிநிதிகளுக்கு மாற்றப்பட்டன.
iv) மாற்றப்பட்ட துறைகளின் அமைச்சர்கள் சட்டப்பேரவைக்கு கடமைப்பட்டவர்கள் ஆவர்.

34.

i) முஸ்லீம்களுக்கு தனித்தொகுதியை வழங்கியது.
ii) முஸ்லீம்களுக்கு அரசமைப்பு சார்ந்த அடையாளத்தை வழங்கியது.
iii) ஆங்கிலேயரின் பிரித்தாளும் கோட்பாடு அரசமைப்பு சட்டத்தில் முறையாக நுழைந்தது.
iv) இந்துக்கள் மற்றும் முஸ்லீம்களை முழுமையாக அந்நியப்படுத்தியது.

35.
i) இந்தியா உணவு தானிய உற்பத்தியின் தன்னிறைவு பெற்றது.
ii) உற்பத்தித் திறன் அதிகரித்தது.
iii) மக்களுக்கான உணவுப் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டது.
iv) சூழலியல் பிரச்சனைகள் தோன்றின.

36.

i) இத்தாலியர்கள் தங்கள் ரோமானிய மூதாதையர்களின் வழித்தோன்றல்கள் என நம்பினர்.
ii) தங்கள் பாரம்பரியம் குறித்து அவர்கள் பெருமை கொண்டார்கள்.
iii) இத்தாலியில் பெருமளவுக்கு சமய சார்பின்மை கலாச்சாரம் நடைமுறையில் இருந்தது.
iv) லத்தீன் மொழியை ரோமானிய மூதாதையர்கள் எழுதியது போன்று எழுதக் கற்றுக்கொண்டனர்.

37.

i) இங்கிலாந்தில் தொழிலில் மந்த நிலையும் உணவுப் பொருட்களின் விலையேற்றமும் ஏற்பட்டது.
ii) எனவே மக்கள் ஹென்றி ஹன்ட் எனும் தீவிரவாதத் தலைவரின் தலைமையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.
iii) மக்களின் மனநிலையை கண்டு பீதியடைந்த அதிகாரிகள் கூட்டத்தினரை தாக்க உத்தரவிட்டனர்.

38.

i) 19ம் நூற்றாண்டில் பிரான்ஸ் நாட்டில் நடந்த பல நிகழ்வுகள் ஐரோப்பிய கண்டம் முழுதும் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியது.
ii) ஐரோப்பாவில் எழுந்த மக்களாட்சி உணர்வையும் தேசியவாதப் போக்கையும், ஒடுக்க முனைந்தர் மெட்டர்னிக் ஆவார்.
iii) அவர் கூற்றானது, பிரான்ஸ் தும்மினால் – ஐரோப்பாவிற்கு ஜலதோஷம் பிடிக்கும்

iv) அதன்படி பிரான்சில் மும்முறை புரட்சி வெடித்த ஆண்டுகளான 1789, 1830 மற்றும் 1848 களில் பிரான்ஸ் தும்மியதாகவே கருத்தில் கொள்ள வேண்டும்.

39.

i) ஆலந்து தீவுகள் மீது ஸ்வீடனும், பின்லாந்தும் உரிமை கோரி சர்ச்சையை கிளப்பின.
ii) பன்னாட்டு சங்கம் அத்தீவு பின்லாந்திற்கு சொந்தம் என்று தீர்ப்பளித்தது.
iii) மேல்புற சைலேசியா குறித்த போலந்து,ஜெர்மனி இடையேயான சர்ச்சையை வெற்றிகரமாக தீர்த்துவைத்தது. வைத்தது
iv) கீரிஸ் பல்கேரியா மீது படையெடுத்த போது சங்கம் கிரீஸின் ஆக்கிரமிப்பை தடுத்தது.

40.
i) பெரும் சக்தி என்ற நிலையில் இருந்து ஜெர்மனி வீழ்ந்தது.
ii) ஐரோப்பா தனது அந்தஸ்தையும் கௌரவத்தையும் இழந்தது.
iii) பொருளாதாரம் சரிந்து நொறுங்கியது.
iv) உலகின் இரு ஆதிக்க சக்திகளாக அமெரிக்க ஐக்கிய நாடும் சோவியத் ரஷ்யாவும் உருவானது.

41. (அ)

1. நிர்வாகம் மற்றும் நிதி விஷயங்களில் மாகாணங்கள் சுதந்திரமாக செயல்பட வேண்டும்.
2. மத்திய மற்றும் மாகாண சட்ட மேலவைகளின் உறுப்பினர்களில் **4/5 பங்கு** நபர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்; **1/5 பங்கு** நபர்கள் நியமனம் செய்ய வேண்டும்.
3. மாகாண மற்றும் மத்திய சட்டப்பேரவைகளின் **4/5 உறுப்பினர்கள்** வாக்குப்பதிவின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.
4. மத்திய நிர்வாக சபை **உறுப்பினர்களில் ½ பங்கு** நபர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்தியர்களாக இருக்க வேண்டும்.
5. மாகாண சபை தேர்தல்களில் முஸ்லீம்களுக்கு **தனித்தொகுதிகள்** வழங்கியதை காங்கிரஸ் ஏற்றது.
6. மத்திய மற்றும் மாகாண அரசுகள் தங்களது சபைகள் நிறைவேற்றிய தீர்மானங்களை செயல்படுத்த வேண்டும்.
7. ஏகாதிபத்திய அரசு அலுவல்களுடன் தொடர்புடைய எவரும் சமநிலை பெற்றிருக்க வேண்டும். (ANY FIVE POINTS)

(ஆ) ஒத்துழையாமை இயக்கம் :

1. தன்னாட்சி அரசு நிறுவப்படுவதை குறிக்கோளாக கொண்டு தொடங்கப்பட்டது.
2. ஒத்துழையாமை இயக்கம் **நேர்மறை** மற்றும் **எதிர்மறை** திட்டம் என இரண்டையும் கொண்டது.
3. நேர்மறை திட்டத்தில் சுதேசி, இந்து முஸ்லீம் ஒற்றுமையும், எதிர்மறை திட்டத்தில் சட்டமன்ற நீதிமன்ற, அந்நிய பொருள் புறக்கணிப்பு ஆகியன அடங்கியிருந்தது.
4. கலவரங்கள் மற்றும் மோசமான வன்முறை நிகழ்ந்தன.
5. சௌரி சௌரா சம்பவத்தின் விளைவாக இப்போராட்டம் நிறுத்தப்பட்டது.

சட்டமறுப்பு இயக்கம் :

1. முழுமையான சுதந்திரம் அடைவதை குறிக்கோளாக கொண்டு தொடங்கப்பட்டது.
2. உப்பு மீதான வரியை அறவழியில் எதிர்க்கும் திட்டமிட்ட போராட்டமாக இருந்தது.
3. உப்பை உற்பத்தி செய்வதற்கு விதித்த தடையை மீறி தண்டி யாத்திரைக்கு காந்தியுடன் இந்தியர்கள் பெருமளவில் இணைந்தனர்.
4. வன்முறையற்ற அறப்போர் என்ற போராட்டமாக திகழ்ந்தது.
5. அரசின் அடக்குமுறைகளால் இப்போராட்டம் முடிவுக்கு வந்தது.

42. அ)

1. பகத்சிங்கின் தொடக்ககால செயல்பாடுகள்

2. பகத்சிங்கின் குண்டுவீச்சு

3. இரண்டாவது லாகூர் சதி வழக்கு

4. பகத்சிங்கின் முழக்கங்கள்

(4 தலைப்புகளையும் விவரித்து எழுதுதல்)

(அல்லது)

42. ஆ)

1. இந்து மத மறுமலர்ச்சி

2. முஸ்லீம் உணர்வின் எழுச்சி

3. பிரிட்டிஷாரின் பிரித்தாலும் கொள்கை

4. காங்கிரஸின் பலவீனக் கொள்கை

(மேற்கூரிய 4 தலைப்புகளையும் விவரித்து எழுதுதல்)

43.அ)

1. போருக்கு பின்பு ஒரு ஆணையத்தின் மூலம் இஸ்லாமியர்கள் பெரும்பான்மையாக வாழும் தொடர் மாவட்டங்களை பிரித்தல்.
2. அம்மாவட்டங்களில் வயது தகுதி அடைந்தோரைக் கொண்டு வாக்கெடுப்பு நடத்தி பாகிஸ்தான் உருவாக்கம் பற்றிய முடிவை எடுத்தல் வேண்டும்.
3. ஒருவேளை ஓட்டெடுப்பின் முடிவில் பிரிவினை உறுதி செய்யப்பட்டால் பொதுவான ஒரு ஒப்பந்தம் ஏற்படுத்த வேண்டும்.
4. அவ்வொப்பந்தத்தில் பாதுகாப்பு, தொலைத் தொடர்பு போன்றவை இடம்பெற வேண்டும்.
5. எல்லையில் அமையப்பெற்ற மாவட்டங்களுக்கு இரு இறையாண்மை கொண்ட நாடுகளில் ஏதோ ஒன்றில் சேர்த்து கொள்ள வாய்ப்பளிக்க வேண்டும்.
6. முழுமையான அதிகார மாற்றம் ஏற்பட்டபின் இத்திட்டம் செயல்முறைக்கு கொண்டு வர வேண்டும்.
7. இராஜாஜி திட்டத்தை அடிப்படையாக கொண்டு காந்தியடிகள் ஜின்னாவோடு பேச்சுவார்த்தை நடத்த முன் வந்தார்.
8. ஆனால் பேச்சுவார்த்தையில் எந்த முடிவும் எட்டவில்லை. (ANY FIVE POINTS)

(அல்லது)

43. ஆ)

1. இந்திய விடுதலைக்கு முந்தைய மொழிவாரி மாநிலக் கோரிக்கை

2. மூவர் ஆணையம்

3. JVP கமிட்டி பரிந்துரை

4. பொட்டி ஸ்ரீராமலு உண்ணாவிரதம்.

(மேற்கண்ட 4 தலைப்புகளை விவரித்து எழுதுதல்)

44. அ)இந்தியாவில் கல்வி வளர்ச்சி

i) இந்தியாவில் 1951 ல் 18.3 **விழுக்காட்டிலிந்த எழுத்தறிவு நிலை 2011ல் 74 விழுக்காடாக** உயர்ந்தது.
ii) ஆண்களில் 82 **விழுக்காட்டினரும்,** பெண்களில் 65 **விழுக்காட்டினரும்** எழுத்தறிவு பெற்றுள்ளனர்.
iii) தொடக்கக் கல்வி முதல் மேல்நிலைப் பள்ளி வரையிலான பள்ளிகளின் எண்ணிக்கை பெருமளவில் அதிகரித்துள்ளது.
iv) 2014–15 **ல்** நாட்டில் 12.72 **லட்சம்** தொடக்க, உயர்தொடக்கப் பள்ளிகளும், 2.45 **லட்சம்** இடைநிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளும் செயல்பட்டன.

v) கல்லூரிகள், மத்திய பல்கலைக்கழகங்கள், மாநில பல்கலைக்கழகங்கள், நிகர்நிலை பல்கலைக் கழகங்கள், மாநில தனியார் பல்கலைக் கழகங்கள் பெருமளவில் தொடங்கப்பட்டன.

vi) நகர மற்றும் கிராமபுறங்களில் இடைநிற்கும் குழந்தைகள் பெரும்பாலும் ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்தோராகவே இருந்தனர்.

vii) பின்தங்கிய மாநிலங்களிலும், பகுதிகளிலும், பள்ளிக் கல்வியின் நிலை மோசமாகவே இருந்தது.

viii) இடைநிற்றல் பிரச்சனையைத் தீர்க்க அரசாங்கத்தினால் அனைவருக்கும் கல்வி திட்டம், **அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டம்** மற்றும் **ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித் திட்டம்** போன்றவை ஏற்படுத்தப்பட்டன.

(அல்லது)

44 ஆ)

i)பிராட்டஸ்டண்ட் சீர்திருத்த இயக்கத்திற்கான காரணங்கள்

ii) மார்டின் லூதரின் பங்களிப்புகள்

(மேற்கண்ட 2 தலைப்புகளையும் விவரித்து எழுதுதல்)

45.

(i) அமெரிக்க விடுதலைப் போருக்கான காரணங்கள் :

(ii) போரின் போக்கு :

(iii) போரின் விளைவுகள் :

(மேற்கண்ட 2 தலைப்புகளையும் விவரித்து எழுதுதல்)

(அல்லது)

45.ஆ)

i) இத்தாலிய இணைவின் தொடக்கம்

ii) ஆஸ்திரியாவுடன் ஏற்பட்ட போர்.

iii)பொதுவாக்கெடுப்பு நடத்துதல்,

iv) வெனிஷியா இணைக்கப்படல்

v) ரோம் இணைக்கப்படல்.

(மேற்கண்ட தலைப்புகளை விவரித்து எழுதுதல்)

46.

(i) முதல் உலகப்போருக்கான காரணங்கள் (1914–1918)

(ii) முதல் உலகப்போரின் முடிவில் ஏற்பட்ட விளைவுகள்

(மேற்கண்ட 2 தலைப்புகளை விவரித்து எழுதுதல்)

(ஆஉலக வரைபடம் (

47.

(அ)

1. அடிப்படை மனித உரிமைகளை மதித்தல்.
2. ஐக்கிய நாடுகள் சபையின் சாசனத்தின் கொள்கைகளையும் நோக்கங்களையும் மதித்தல்.
3. அனைத்து நாடுகளின் இறையாண்மையும் அவற்றின் எல்லை, பரப்பு, ஒருமைப்பாட்டையும் மதித்தல்.
4. அனைத்து இனங்களும், அனைத்து நாடுகளும் சமம்.
5. அடுத்த நாட்டின் உள் விவகாரங்களில் தலையிடாமல் இருத்தல்.
6. கூட்டுபாதுகாப்பு உடன்படிக்கைகளை பயன்படுத்தாதிருத்தல்.
7. ஒரு நாடு மற்ற நாடுகளுக்கு எதிராக நெருக்கடிகளை தராதிருத்தல்.
8. அனைத்து பன்னாட்டு பிரச்சனைகளுக்கும் அமைதியான வழியில் தீர்வு காணுதல்.
9. பரஸ்பர அக்கறை, ஒத்துழைப்பு ஆகியவற்றை மேம்படுத்துதல்.
10. நீதி மற்றும் பன்னாட்டு கட்டுப்பாடுகளுக்கு மதிப்பளித்தல்.

(ஆ) இந்திய தேசிய இயக்கம்–1930 to 1950 வரை

(1 அலகு = 10 ஆண்டுகள்)

ஆண்டு	
1930	தண்டி யாத்திரை
1931	காந்தி இர்வின் ஒப்பந்தம்
1932	பூனா ஒப்பந்தம்
1940	ஆகஸ்ட் கொடை
1942	வெள்ளையனே வெளியேறு இயக்கம்
1945	வேவல் திட்டம்
1946	நேரடி நடவடிக்கை நாள் அமைச்சரவை /தூது குழு
1947	இந்தியா விடுதலை அடைதல்

ஆண்டு

1950 இந்தியா குடியரசு நாடாக மாறுதல்

(ஏதேனும் 5 மட்டும்).